அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

அ.எண்.119/2015
தேதி.13.07.2016

# ஏழை, எளியோர்க்கு நலத்திட்ட உதவிகள் வழங்கிடுவீர்!. ச.ம.க நிறுவனத் தலைவர் ஆர்.சரத்குமார் வேண்டுகோள்!

ஜூலை 14 ஆம் தேதி என்னுடைய பிறந்தநாள் விழாவிற்கு நேரில் வந்து சந்தித்து வாழ்த்தவும், வாழ்த்துப் பெறவும் விரும்பும் சமத்துவ சகோதரர்கள் சென்னை வரும் செலவை தவிர்த்து தங்கள் பகுதியில் உள்ள ஏழை எளியோர்க்கு தேவையான உதவிகளையும், நலிந்தோர்க்கு நலத்திட்டங்கள் வழங்கியும், மாணவ மாணவியர்க்கு கல்வி உதவிகளையும் செய்திட வேண்டுகிறேன்.

எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும், இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும் என்ற புரட்சிக்கவிஞர் பாரதிதாசனின் வரிகளுக்கேற்ப அனைவரது வாழ்வும் வளம்பெற ஜாதி, மத, இன, மொழி, பேதமற்ற சமத்துவ சமுதாயதம் உருவாக ஒன்றிணைந்து பாடுபடுவோம். வாழ்வில் எத்தகைய சூழ்நிலைகளையும் கடந்து வாழ்வில் வெற்றி பெற வேண்டும் என்றால் அதற்கு உழைப்பு ஒன்றே திறவுகோளாக இருக்க முடியும். எனவே உழைப்போம், உயர்வோம் என்பதை தாரக மந்திரமாக கொண்டு கொடியேற்றுதல், கூட்டம் நடத்துதல், மக்கள் பணி செய்தல் போன்ற பணியாற்றி செயல்படுங்கள்.

- வீட்டுக்கொரு விவசாயி உருவாக வேண்டும்,
- விவசாயம் லாபமுள்ள தொழிலாக மாற்றப்பட வேண்டும்.
- சிறுதொழில் வளர்ச்சி காண வேண்டும்
- ஊருக்கொரு தொழிற்சாலை உருவாக வேண்டும்
- அனைத்து கல்வி, மருத்துவம் இலவசமாக்கப்பட வேண்டும்
- வேலை இல்லா திண்டாட்டம் குறைக்கப்பட வேண்டும்
- வேலை வாய்ப்புகளுக்கு உரிய கல்வியை உருவாக்க வேண்டும்
- அடிப்படை வசதிகள் அனைவருக்கும் கிடைத்திட வேண்டும்
- ஏற்றத்தாழ்வுகள் அகற்றப்பட வேண்டும்
- இறக்குமதி குறைந்து ஏற்றுமதி வளர்ந்திட வேண்டும்

- அனைத்து மொழிகளையும் ஆர்வத்தோடு கற்றிட வேண்டும்
- குடியை மறக்க வேண்டும்
- குடும்பத்தை வளர்க்க வேண்டும்
- உள்ளத்தை வளமாக்க உடலையும் காக்க வேண்டும்

இதற்கான **"மாற்றத்தை நோக்கி"** செயல்பட இந்நாளில் உறுதியேற்போம் என்று என் பிறந்தநாள் செய்தியாக தெரிவித்து கொள்கிறேன். வருகிற 15ந்தேதி சென்னை விருகம்பாக்கத்தில் மாலை 4.00 மணியளவில் நடைபெற உள்ள முப்பெரும் விழாவில் இயக்கத்தின் அனைத்து நிர்வாகிகளும் கலந்து கொண்டு விழாவினை சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்
உழைப்பவரே உயர்ந்தவர்
என்றும் அன்புடன்



ஆர்.சரத்குமார் B.Sc
தலைவர்